# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022 - 2023

### மானியக் கோரிக்கை எண். 24

# சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

**எஸ். ரகுபதி**
சட்டத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கங்கள் |
|---|---|---|
| I. | முன்னுரை | 1–2 |
| II. | நிருவாக அமைப்பு | 2–4 |
| III. | சிறை நிர்வாக பிரிவுகள் | 4–8 |
| IV. | மனிதவள மேம்பாடு | 8–13 |
| V. | சிறைகளின் வகைகள் | 13–14 |
| VI. | சிறை பாதுகாப்பை பராமரித்தல் | 15 –19 |
| | சிறைவாசிகளின் நலன் | 20–46 |
| IX. | சிறைத்துறை பணியாளர்களின் நலன் | 46–54 |
| X. | புதிய செயல்பாடுகள் | 55–63 |
| XI. | முடிவுரை | 63 |
| | பிற்சேர்க்கை I–II | 65–75 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண். 24

## சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு – 2022–2023

### I. முன்னுரை

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை குற்றவியல் நீதிமுறை அமைப்பில் ஒருங்கிணைந்த மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த துறையாக விளங்குகிறது. சிறைவாசிகளை சிறையில் வைத்து பாதுகாப்பது மட்டுமின்றி, அவர்களை சீர்திருத்தி, மறுவாழ்வளித்து, விடுதலைக்கு பின் சமூகத்தில் இணைப்பதன் மூலம், மீண்டும் குற்றம் இழைத்தலை குறைப்பதே இத்துறையின் முதன்மை நோக்கமாகும். இந்நோக்கத்தை அடையும் வகையில் சிறைவாசிகளின் தனிமனித, குடும்ப மற்றும் சமூக தேவைகளை உள்ளடக்கிய ஒரு முழுமையான மேம்பாட்டினை அடையும் வண்ணம், சிறைவாசிகளுக்கு கல்வி, திறன் மேம்பாடு, தொழிற்கல்வி, யோகா, தியானம் மற்றும் இதர வாழ்வியல் பயிற்சிகள் அளிக்கப்பட்டு

வருகிறது. வளர்ந்து வரும் முற்போக்கு சீர்திருத்த தண்டனைக் கொள்கைகளுக்கு ஏற்றவாறு, சிறைகளை நவீனமயமாக்கவும், சிறைகளின் வாழ்நிலை தரத்தினை உயர்த்திடவும் தொடர்ச்சியான முனைப்புடன் கூடிய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## II. நிருவாக அமைப்பு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, அரசின் உள் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. இத்துறையின் தலைவர், காவல்துறை இயக்குநர் பதவி நிலையில் உள்ள முதுநிலை இந்திய காவல் பணி அதிகாரி ஆவார். இவருக்கு உதவியாக தலைமையிட சிறைத்துறை துணைத் தலைவர் மற்றும் சென்னை, வேலூர், திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய ஐந்து இடங்களில் சரக சிறைத்துறை துணைத் தலைவர்கள் உள்ளனர். சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் நிர்வாக கட்டமைப்பு **பிற்சேர்க்கை–I–ல்** வழங்கப் பட்டுள்ளது.

மத்திய சிறைகளும், அவற்றின் அதிகார எல்லைக்குட்பட்ட மாவட்ட சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளிகள் (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள்) ஆகியவை

சிறைக் கண்காணிப்பாளர்களின் நிர்வாக கட்டுப் பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன. புழல், திருச்சி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள பெண்கள் தனிச்சிறைகள் பெண் சிறைக் கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின் கீழும், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள பெண்கள் தனிச்சிறைகள் பெண் கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின் கீழும் இயங்கி வருகின்றன. மாவட்ட சிறைக் கண்காணிப்பாளராக பணிபுரியும் கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர்கள், அந்தந்த மாவட்டங்களில் உள்ள தனிக் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள், கிளைச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளிகள் ஆகியவற்றை சிறைக் கண்காணிப்பாளர்கள் மேற்பார்வையிட உதவி புரிகின்றனர்.

மேலும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் சிறை அலுவலர் / துணை சிறை அலுவலர் / உதவி சிறை அலுவலர் / முதன்மை தலைமை சிறைக் காவலர் / முதல் நிலை சிறைக் காவலர் / இரண்டாம் நிலை சிறைக் காவலர் / தொழில்நுட்பப் பணியாளர் / தொழில்நுட்பம் சாரா பணியாளர் / சீர்திருத்தப் பணியாளர் / மருத்துவ மற்றும் அமைச்சுப் பணியாளர் ஆகியோர்கள் உள்ளனர்.

சிறைத்துறை பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை **28.02.2022** அன்றைய நிலவரப்படி **5452** ஆகும்.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 142 சிறைகள் உள்ளன. அவற்றுள் 9 மத்திய சிறைகள், 5 பெண்களுக்கான தனிச் சிறைகள், 14 மாவட்டச் சிறைகள், 89 ஆண்களுக்கான கிளைச் சிறைகள், 7 பெண்களுக்கான கிளைச் சிறைகள், 1 ஆண்களுக்கான தனிக் கிளைச் சிறை, 2 பெண்களுக்கான தனிக் கிளைச் சிறைகள், 12 பார்ஸ்டல் பள்ளிகள் (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள்) மற்றும் 3 திறந்த வெளிச் சிறைகள் ஆகியவை அடங்கும்.

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து சிறைகளின், சிறைவாசிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட இடவசதி **24,342** ஆகும். சிறைவாரியான அங்கீகரிக்கப்பட்ட இடவசதி **பிற்சேர்க்கை–II–ல்** வழங்கப்பட்டுள்ளது.

## III. சிறை நிர்வாக பிரிவுகள்

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில், கீழ்க்காணும் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

### i) நுண்ணறிவு மற்றும் விழிப்புப்பணி பிரிவு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில், காவல் துறையிலிருந்து மாற்றுப் பணியின் மூலம் பணியமர்த்தப்பட்ட 20 அலுவலர்கள் மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையைச் சேர்ந்த 13 அலுவலர்களுடன் "நுண்ணறிவு மற்றும் விழிப்புப் பணி பிரிவு" செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு சிறைவாசிகள் மற்றும் சிறைத்துறைப் பணியாளர்களின் நடவடிக்கைகளை கண்காணித்து, முக்கியமான மற்றும் கூர்வுணர்வுடைய தகவல்களை சேகரித்து, சிறை நிர்வாகம் திறன்பட செயல்பட உதவுவதோடு மட்டுமின்றி, நுண்ணறிவு தகவல்களை இதர புலனாய்வு அமைப்புகளுடன் பரிமாற்றவும் உதவுகிறது.

### ii) நன்னடத்தைப் பிரிவு

1946–ஆம் ஆண்டு முதல் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் ஓர் அங்கமாக இயங்கி வரும் "நன்னடத்தைப் பிரிவானது" தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. அவருக்கு உதவியாக 12 மண்டல நன்னடத்தை அலுவலர்கள் மற்றும் 64 நன்னடத்தை அலுவலர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

நன்னடத்தை அலுவலர்கள், குற்றவாளிகள் நன்னடத்தை சட்டம், 1958 மற்றும் தமிழ்நாடு இளம் குற்றவாளிகள் சீர்திருத்தச் சட்டம், 1925 ஆகியவற்றை செயல்படுத்துதல், குற்றவியல் நீதித்துறை நடுவர்களுக்கு உரிய விசாரணை அறிக்கைகள் அளித்தல், வயது வந்த குற்றவாளிகளை கண்காணித்தல், அவர்கள் மீண்டும் குற்றங்கள் இழைக்கா வண்ணம் தடுத்தல் ஆகிய பணிகளில் உதவுகின்றனர். நீதிமன்றத்திற்காக குற்றவாளிகளின் நடத்தை மற்றும் அவர்கள் வாழும் சூழல் குறித்து விசாரணை செய்கின்றனர். அவர்கள் நன்னடத்தையின் பேரில் விடுதலை செய்யப்படும் குற்றவாளிகளை கண்காணித்து அவர்களின் மறுவாழ்வையும் கவனிக்கின்றனர்.

மேலும், முதன்முறையாக குற்றம் செய்யும் குற்றவாளிகளுக்கு தண்டனை அளித்து, சிறைக்கு அனுப்புவதற்கு பதிலாக, சில நிபந்தனைகளின் அடிப்படையில், நன்னடத்தையின் பேரில் அவர்களை விடுவிப்பது அவர்களுடைய முக்கியமான பணியாகும். நன்னடத்தைப் பிரிவை சேர்ந்த அலுவலர்கள் சிறைவாசிகளை நேர்காணல் செய்து, சிறைவாசிகளது குழந்தைகளின் கல்வி, குடும்ப உறுப்பினர்களின் வாழ்வாதாரத்திற்கான வருவாயை ஈட்டிட தேவையான கடன் வசதி, தண்டனை சிறைவாசிகள் விடுதலைக்குப் பின்னர் வேலைவாய்ப்பு பெறுதல் போன்ற

குறிப்பான தேவைகளை ஆராய்ந்து, அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உதவியாக பணியாற்றி வருகின்றனர். நன்னடத்தை அலுவலர்கள் சிறைவாசிகளுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து செயல்பட்டு வருகின்றனர்.

மேலும், காவல் நிலைய சிறைவைப்பு அறைகளில் விசாரணை சிறைவாசிகளுக்கு மனித உரிமை மீறல் ஏதும் இல்லை என்பதை உறுதி செய்யும் பொருட்டு அவற்றை பார்வையிடுமாறும் நன்னடத்தை அலுவலர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

### iii) தொழில்நுட்பப் பிரிவு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் உள்ள நவீன கருவிகள் மற்றும் சாதனங்களை சிறந்த முறையில் பராமரிக்கும் பொருட்டு, தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மத்திய சிறைகளிலும், ஓர் ஆய்வாளர் (தொழில்நுட்பம்) மற்றும் 10 சார்பு ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) ஆகிய பணியாளர் களுடன் "தொழில்நுட்பப் பிரிவு" ஒன்று செயல்பட்டு வருகிறது.

### iv) மோட்டார் வாகனப் பிரிவு

துறையில் பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களையும் பராமரிக்கும் பொறுப்பை "மோட்டார் வாகன பிரிவில்" ஒரு காப்பு காவல் ஆய்வாளர் (வகை–2) ஏற்று பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

### v) சட்ட ஆலோசனைப் பிரிவு

குற்ற வழக்கு தொடர்பு இயக்ககத்திலிருந்து, அரசு உதவி வழக்கு நடத்துநர் (தரம்–1) என்ற நிலையில் உள்ள ஒருவர், சட்ட ஆலோசனைகளை வழங்கிடவும், நீதிமன்ற வழக்குகளை கையாள்வதில் உதவிடவும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமையிடத்தில் உருவாக்கப்பட்ட "சட்ட ஆலோசனைப் பிரிவில்" சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டு, பணியாற்றி வருகிறார்.

## IV. மனிதவள மேம்பாடு

### பணியாளர் தேர்வு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறைக்கு இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். தற்போது 102 ஆண் மற்றும் 17 பெண் இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள், தமிழ்நாடு சீருடைப்

பணியாளர் தேர்வுக் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டு, பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 14.03.2022 முதல் திருச்சி சிறைக் காவலர் பயிற்சி பள்ளியில் ஆறு மாத கால அடிப்படை பயிற்சி பெற்று வருகின்றனர்.

சிறை அலுவலர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) பதவிக்கு நேரடி நியமன முறையில் தகுதியான நபர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். அரசாணை (நிலை) எண்.181, உள் (சிறை–1) துறை, நாள். 08.04.2022–ன்படி தற்போது ஒரு சிறை அலுவலர் நேரடி நியமன முறையில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

காலியாக உள்ள சிறை அலுவலர் (6 ஆண்கள்) மற்றும் சிறை அலுவலர் (2 பெண்கள்) பதவிகளை நேரடி நியமன முறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனம் செய்திடும் பொருட்டு, உரிய அறிவிக்கை வெளியிடும் நடவடிக்கை தேர்வாணையத்தின் பரிசீலனையில் உள்ளது.

மன இயல் நிபுணர் பதவிக்கு நேரடி நியமன முறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். அரசாணை (நிலை) எண்.327,

உள் (சிறை−1) துறை, நாள்.12.08.2021−ன்படி இரண்டு நபர்கள் மன இயல் நிபுணர்களாக நேரடி நியமன முறையில் நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

மேலும், காலியாக உள்ள 4 மன இயல் நிபுணர் பதவிகளை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்ப, உரிய அறிவிக்கை வெளியிடும் நடவடிக்கை தேர்வாணையத்தின் பரிசீலனையில் உள்ளது.

உதவி சிறை அலுவலர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) மற்றும் நன்னடத்தை அலுவலர்கள் பதவிக்கு நேரடி நியமன முறையில் தகுதியான நபர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர்.

2 நன்னடத்தை அலுவலர் பதவிகளை நிரப்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 23.02.2022 அன்று உரிய அறிவிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

**பயிற்சி**

**I) சிறை மற்றும் சீர்திருத்த நிருவாகப் பயிற்சியகம் (APCA), வேலூர்**

சிறைத்துறை அலுவலர்களுக்கு, சிறைவாசிகளை சீர்திருத்தும் முறைகள் மற்றும் சிறை மேலாண்மை

ஆகியவற்றில் பயிற்சியளிப்பதற்காக, சிறை மற்றும் சீர்திருத்த நிருவாகப் பயிற்சியகம் (APCA), வேலூரில், 1979–ஆம் ஆண்டு நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. இப்பயிற்சியகம் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகம் மற்றும் கேரளம் ஆகிய ஐந்து தென் மாநிலங்களின் கூட்டு பயிற்சி மையமாகும். இப்பயிற்சியகத்தின் நடைமுறை செலவினத்தை ஐந்து மாநிலங்களும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

**ii) சிறைக் காவலர் பயிற்சி**

சிறைக்காவலர் பயிற்சி பள்ளி ஒன்று வேலூர் மத்திய சிறைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் 130 சிறைக் காவலர்களுக்கு ஒரே நேரத்தில் அடிப்படை பயிற்சி வழங்கும் வசதியுடன் இயங்கி வருகிறது. இப்பள்ளி தேவையான பணியாளர்கள் மற்றும் இதர வசதிகளைக் கொண்டுள்ளது.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு ஆறு மாத கால அடிப்படை பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சியில் உடற்பயிற்சி, ஆயுதபயிற்சி, சிறை மேலாண்மை விதிகள் மற்றும் நெறிமுறைகள் ஆகியவற்றுடன் மனித உரிமைகள் பற்றிய சிறப்பு பயிற்சியும் அளிக்கப்படுகிறது,

துணைச்சிறை அலுவலர், உதவி சிறை அலுவலர், முதன்மை தலைமை சிறைக் காவலர், முதல் நிலை சிறைக் காவலர் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர் ஆகியோருக்கு, வேலூர் காவலர் பயிற்சி பள்ளியில் குறிப்பிட்ட கால இடைவெளியில் புத்தாக்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

சென்னை, மருதம் காவல்துறை அதிரடிப்படை பயிற்சிப் பள்ளி வாயிலாக சிறைக் காவலர்களுக்கு அதிரடிப்படைக்கான பயிற்சி, கராத்தே, சிலம்பம் போன்ற தற்காப்பு கலைகள், ஆயுதமின்றி தனித்து நின்று போராடுதல் மற்றும் வெடிகுண்டுகளைக் கண்டறிந்து அவற்றை செயலிழக்கச் செய்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

**iii) பிற பயிற்சிகள்**

மனித உரிமைகள் மற்றும் சிறை மேலாண்மை குறித்து நடத்தப்படும் தேசிய அளவிலான பயிற்சி வகுப்புகள், புதுடில்லியில் உள்ள காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், லோக்நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண் தேசிய குற்றவியல் மற்றும் தடயவியல் பயிற்சி நிறுவனம், தேசிய குற்ற ஆவணக் காப்பகம் ஆகியவற்றிலும் மற்றும் பிற

மாநிலங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்படி வகுப்புகளுக்கு துறை சார்ந்த அலுவலர்கள் பயிற்சி பெறுவதற்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

## V) சிறைகளின் வகைகள்

மரண தண்டனை, ஆயுள் தண்டனை மற்றும் மூன்று மாதங்களுக்கு மேல் தண்டனை பெற்றவர்கள், பெருங்குற்றங்களுக்காக தண்டனை பெற்றவர்கள், கொடுங்குற்றவாளிகள், தொடர்ந்து குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் அதிக ஊறு விளைவிக்கக் கூடியவர்கள், கடன் பெற்று செலுத்த இயலாமல் சிறைப்படும் சிறைவாசிகள், தடுப்பு காவல், நீதிமன்றகாவல் மற்றும் விசாரணை சிறைவாசிகள் என முறைப்படி வகைப்படுத்தபட்டு அந்த வகைப்பாட்டின்படி சிறைவாசிகள் மத்திய சிறையில் உள்ள வெவ்வேறு பகுதிகளில், தனித் தனியே அனுமதிக்கப்படுகின்றனர். வெளி நாட்டைச் சார்ந்த நீதிமன்ற தண்டனை / காவல் / விசாரணை சிறைவாசிகள் சென்னை புழல் மத்திய சிறை வளாகத்தில் வைக்கப்படுகின்றனர்.

மாவட்ட நீதிமன்றங்களால் மூன்று மாத காலத்திற்கும் குறைவான தண்டனை விதிக்கப் பட்டவர்கள் மற்றும் விசாரணை சிறைவாசிகள்

ஆகியோர் மட்டுமே, அந்தந்த மாவட்டச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். சிறுகுற்றங்கள் புரிந்த விசாரணை சிறைவாசிகள் மட்டும் கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர்.

பெண் சிறைவாசிகள், பெண்களுக்கான தனிச் சிறைகளில் மட்டுமே வைக்கப்படுகின்றனர். கடுங்குற்றங்கள் புரிந்த பெண் சிறைவாசிகள் மாநிலத்தில் உள்ள ஐந்து பெண்கள் தனிச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். சிறுகுற்றங்கள் புரிந்த நீதிமன்ற காவல் மற்றும் விசாரணை பெண் சிறைவாசிகள், பெண்களுக்கான தனிக் கிளைச் சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். பெண்களுக்கான சிறைகள், பெண் பணியாளர்களால் மட்டுமே பாதுகாக்கப்படுகின்றன.

21 வயதிலிருந்து 55 வயதிற்குட்பட்ட, திடமான உடல்நிலை மற்றும் மனநிலை, நன்னடத்தை, எளிதில் உணர்ச்சிவசப்படாத தன்மை மற்றும் விவசாய பின்னணி உடைய சிறைவாசிகள் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் திறந்த வெளிச் சிறைக்கு மாற்றப்படுகின்றனர்.

## VI. சிறை பாதுகாப்பை பராமரித்தல்

### i) செல்லிடத்து தொலைபேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள்

மாநிலத்திலுள்ள 9 மத்திய சிறைகளில் உள்ள 12 உயர் பாதுகாப்பு தொகுதிகளில், பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் நோக்கத்துடன், செல்லிடத்துத் தொலைபேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள் பொருத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், மத்திய சிறைகள்–I & II, புழல், பாளையங்கோட்டை, மதுரை மற்றும் திருச்சி ஆகியவற்றிலும், புழல், வேலூர், திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் உள்ள 5 பெண்கள் தனிச் சிறைகளிலும், கூடுதலாக 12 கருவிகள் ரூ.10.10 கோடி செலவில் அமைத்திட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இக்கருவிகளை நிறுவுவதற்கு அனுமதி வழங்குவது குறித்த நடவடிக்கை ஒன்றிய அரசின் பரிசீலனையில் உள்ளது.

### ii) உயர் பாதுகாப்பு தொகுதிகள்

அனைத்து மத்திய சிறைகளிலும், உயர் பாதுகாப்பு தொகுதிகள் அமைக்கப்பட்டு, சிறைக் களப்பணியாளர்களால் கண்காணிக்கப்படுவதுடன், சிறைவாசிகளின் உரிமைக்கும், கண்ணியத்திற்கும்

குறைவு ஏற்படாத வகையில், சிறைவாசிகளின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் சிறையிலிருந்து தப்பிப்பதைத் தடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடலூர் மத்திய சிறை தவிர, அனைத்து மத்திய சிறைகளின் வெளிப்புற பாதுகாப்பு தமிழ்நாடு காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் தொடர்புடைய கடுங்குற்றங்கள் புரிந்த சிறைவாசிகள் உயர் பாதுகாப்பு தொகுதிகளில் வைக்கப்படுகின்றனர். இச்சிறைவாசிகள் அனைவரும் தினசரி மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் உயர் அலுவலர்களால் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இச்சிறைவாசிகளை நேர்காணல் செய்ய வரும் பார்வையாளர்களும் சோதனை செய்யப்படுகின்றனர். சிறைகளில் எந்த அசம்பாவித நிகழ்வும் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு, நாச வேலைகளைத் தடுத்தல் குறித்த பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### iii) மோப்ப நாய் பிரிவு

சிறைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்திட, இத்துறையில் மோப்பநாய் பிரிவும் செயல்பட்டு வருகிறது.

### iv) மின்னணு திறப்பான் மேலாண்மை அமைப்பு

மத்திய சிறை–I & II, புழல் மற்றும் பெண்கள் தனிச்சிறை, புழல் ஆகியவற்றில் மின்னணு திறப்பான் மேலாண்மை அமைப்பு (Electronic Key Management System) சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு, சிறப்பாக இயங்கி வருகிறது.

### v) அலைபேசி மற்றும் இரும்பு உலோகம் கண்டறியும் அமைப்பினை நிறுவுதல் (Security Poles)

9 மத்திய சிறைகள் மற்றும் 3 பெண்கள் தனிச் சிறைகளில் 12 அலைபேசி மற்றும் இரும்பு உலோகம் கண்டறியும் பாதுகாப்புக் கருவிகள் நிறுவப்பட்டு, சிறைகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

### vi) வாக்கி டாக்கி கருவிகள்

உபரி மின்கலத்துடன் கூடிய 380 புதிய வாக்கி டாக்கி கருவிகள், அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறை, புழல், வேலூர், திருச்சி மற்றும் மாவட்டச் சிறை & பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மத்திய சிறைகள்–I & II, புழல், திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய சிறைகளில் 4 ரிப்பீட்டர் செட்டுகள் நிறுவப்பட்டுள்ளன.

### vii) மறைகாணி கேமராக்கள் (CCTV Cameras)

சிறைவாசிகள் மற்றும் பார்வையாளர் நடமாட்டத்தை கண்காணிக்கும் வகையில், அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை & பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் 257 மறைகாணிகள் (CCTV) முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், கூடுதலாக 100 கண்காணிப்பு கேமிராக்கள், ஐபி கேமிராக்கள் (Internet Protocol Cameras) மற்றும் சிறைவாசிகளின் அனைத்து விவரங்கள் உள்ளடக்கிய மின்னணு அட்டை 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை & பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### viii) காணொலி கலந்துரையாடல் வசதிகள்

சிறைகளையும் நீதிமன்ற வளாகங்களையும் இணைப்பதன் மூலம், சிறைவாசிகளை நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்தாமல், நீதிமன்ற காவல் காணொலி கலந்துரையாடல் மூலம் சிறைவாசிகளின் நீதிமன்ற காவல் நீட்டிக்கப்படவும், வழிக்காவலின்போது சிறைவாசிகள் தப்பித்தல் மற்றும் சிறைவாசிகள் மீதான தாக்குதல்கள் போன்ற அசம்பாவித நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்கவும் மற்றும் வழிக்காவலுக்கும்

போக்குவரத்திற்கும் ஆகும் செலவைக் குறைக்கவும், காணொலி கலந்துரையாடல் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள் மற்றும் கிளைச் சிறைகள் உட்பட 117 சிறைகள், 403 நீதிமன்றங்களுடன் காணொலி கலந்துரையாடல் கருவிகள் மூலம் இணைக்கப்பட்டுள்ளன.

**ix) ஊடுகதிர் அலகிடல் கருவிகள் (X–Ray Baggage Scanners)**

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை & பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் போதைப் பொருட்கள், ஆயுதங்கள் மற்றும் பிற தடை செய்யப்பட்ட பொருட்கள் சிறையினுள் கடத்தப்படுவதை தடுக்கும் பொருட்டு, ஊடுகதிர் அலகிடல் கருவிகள் பொருத்தப்பட்டு உள்ளன.

அரசாணை (நிலை) எண்.497, உள் (சிறை.4) துறை, நாள்.17.11.2021–ன்படி ரூ.180.00 லட்சம் செலவில் அனைத்து மத்திய சிறைகளில் உள்ள பழைய ஊடுகதிர் அலகிடல் கருவிகளுக்கு மாற்றாக, 9 புதிய கருவிகள் கொள்முதல் செய்திட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

## VII. சிறைவாசிகளின் நலன்

### i) மனித உரிமை

சிறைவாசிகளின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதின் அதிமுக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டு, சிறை அலுவலர்களுக்கு போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதுடன், அவர்களுக்கு அளிக்கப்படும் அனைத்துப் பயிற்சிகளிலும், சிறைவாசிகளின் மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிகள் இடம்பெற்றுள்ளன. மேலும், சிறைவாசிகளின் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தை உறுதிப்படுத்தும் வண்ணம் அனைத்து சிறைகளிலும், அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையிலான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

அலுவல் சார்ந்த பார்வையாளர்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் சிறை நிர்வாகம் மற்றும் சிறைவாசிகள் நடத்தப்படும் முறை குறித்து ஆய்வு செய்வதற்கு சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். சிறைகளை திடீர் பார்வையிட்டு அங்கு மனித உரிமை மீறல்கள் ஏதேனும் உள்ளனவா என்று சோதனை செய்திட, பொதுமக்களில் 62 நபர்கள் அலுவல் சாரா பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சிறைவாசிகளுக்கு அடிப்படைத் தேவைகள் முழுமையாக

வழங்கப்படுவதையும், நன்றாக நடத்தப்படுவதையும் உறுதி செய்திட மனித உரிமை ஆணையங்களின் உறுப்பினர்களும், மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதிகளும், பிற அலுவலர்களும் சிறைகளுக்கு வருகை புரிகின்றனர்.

## ii) உடல் மற்றும் மன நலன்

நீண்ட காலமாக சிறைவாசிகள் சிறையில் தண்டனையைக் கழிப்பது அவர்களின் மன இறுக்கத்தினை அதிகப்படுத்தி, அவர்களிடம் வன்முறை செயல்பாடு, மனஅழுத்தம் மற்றும் தற்கொலை எண்ணங்களாக வெளிப்படுவதை கருத்திற்கொண்டு, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறைகள் மற்றும் மாவட்டச்சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் மனஇயல் நிபுணர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களது பணி, மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டோர்களுக்கும், வன்முறை செயலினை வெளிப்படுத்தும் குணமுடைய சிறைவாசிகளுக்கும், ஆலோசனை வழங்கி சிகிச்சை அளிக்க பயன்படுத்தப்படுகிறது. மனநல ஆலோசனை வழங்கப்படுவதன் மூலம் மன அழுத்தத்தால் அவதியுறும் சிறைவாசிகளின் மனதில் தன்னம்பிக்கையை விளைவிப்பதன் மூலம், தற்கொலை எண்ணம் அகற்றப்படுகிறது.

மனநல சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகள் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, சென்னை அரசு மனநல காப்பகத்தில் உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், அரசு மருத்துவமனைகளில் உள்ள மன இயல் நிபுணர்களைக் கொண்டும் தேவைக்கேற்ப சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மனதளவில் பாதிக்கப்பட்ட சிறைவாசிகளின் மனநலனை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மத்திய சிறைக்கும், தலா இரண்டு ஆற்றுப்படுத்துநர்களும் (Counsellors), ஒவ்வொரு பெண்கள் தனிச்சிறை மற்றும் மாவட்டச் சிறை & பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றுக்கு தலா ஒரு ஆற்றுப்படுத்துநரும் (Counsellor) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மனநல ஆலோசனை வழங்குவதுடன், கூடுதலாக உடற்பயிற்சி, யோகா, தியானம், உள் மற்றும் வெளியரங்கு விளையாட்டு வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. இம்முயற்சிகளுக்கு உறுதுணையாக தற்போது 21 தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சிறைவாசிகளுக்கு நூலக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறைகளில் உள்ள நூலகங்களில் இருந்து சிறைவாசிகள் புத்தகங்களை

இரவல் பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நூலகங்கள் பொழுதுபோக்கு அம்சமாக விளங்குவதோடு மட்டுமல்லாமல், சிறைவாசிகளின் மன நலன் மேம்படவும் உதவுகின்றன.

மேற்படி வசதிகள் தவிர, சிறைவாசிகளின் உடல் ஆரோக்கியத்தை கண்காணித்து, மேம்படுத்திட போதுமான மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### iii) சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதி

சிறைவாசிகளுக்கு தேவைப்படும் மருத்துவ சிகிச்சைகளை வழங்கிட, அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறைகளில் அனுபவமிக்க மருத்துவர்கள், அவர்களுக்கு உதவிட போதிய துணை மருத்துவ பணியாளர்களைக் கொண்ட சிறை மருத்துவமனைகள் நிறுவப்பட்டுள்ளன. தொடர் சிறப்பு சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகள் சிறை மருத்துவமனைகளில் உள் நோயாளியாக அனுமதிக்கப்படுகின்றனர்.

சிறப்பு சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகளை, வெளி மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்வதற்காக அவசர சிகிச்சை ஊர்திகள், அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள், மாவட்டச் சிறைகள், பெண்கள் தனிக்

கிளைச் சிறைகள் மற்றும் பெண்கள் கிளைச் சிறைகள் ஆகிய சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

21 வகையான உயிர் காக்கும் உபகரணங்கள் அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை & பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டையில் உள்ள சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆரோக்கியத்தை பேணும் பொருட்டு, சிறைகளில் புகை பிடித்தல் மற்றும் புகையிலை உபயோகித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. சிறைவாசிகளுக்கு எய்ட்ஸ் நோய் தாக்கத்தினை கண்டறிய, பரிசோதனை செய்வதற்காக அனைத்து மத்திய சிறைகளிலும் ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையம் (ICTC) நிறுவப்பட்டுள்ளது. உரிய கலந்தாய்வுக்குப் பின்னர், அனைத்து சிறைவாசிகளும் எச்.ஐ.வி (H.I.V) பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

சிறைவாசிகளிடையே தொற்று நோய் பரவுவதைத் தடுப்பதற்காக, கத்தி மூலம் முகச்சவரம் செய்யும் முறை கைவிடப்பட்டு, அதற்கு மாற்றாக, மறுபயன்பாடு இல்லாத சவர ரேசர்கள் ஒவ்வொரு சிறைவாசிக்கும் மாதம் ஒன்றிற்கு இரண்டு வீதம், ஆண்டொன்றுக்கு

ரூ.43.68 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய நடவடிக்கைகள் மட்டுமின்றி சிறைவாசிகளை தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்பதற்காக அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள், புழல் மற்றும் திருச்சியில் ரூ.1240.10 இலட்சம் செலவிலும், பூவிருந்தவல்லி, தனிக்கிளைச் சிறையில் ரூ.30.59 இலட்சம் செலவிலும் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**iv) உணவு மற்றும் உடை**

தமிழ்நாடு சிறை விதிகள், 1983ல் வரையறுக்கப்–பட்ட அளவின்படி சத்தான மற்றும் சமச்சீரான உணவு சுகாதாரமான முறையில் சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நோய்வாய்ப்பட்ட சிறைவாசிகளுக்கு மருத்துவ உணவுகளாக பால், ரொட்டி, முட்டை மற்றும் கோழி இறைச்சி ஆகியன மருத்துவ அலுவலர்களின் பரிந்துரையின் பேரில் வழங்கப்பட்டு வருகிறது.

அசைவ உணவு சாப்பிடும் சிறைவாசிகளுக்கு 115 கிராம் கோழி இறைச்சியும், சைவ உணவு சாப்பிடும் சிறைவாசிகளுக்கு உருளைக்கிழங்கு பொரியல், கேசரி மற்றும் ஒரு வாழைப்பழம்

ஆகியவை, வாரம் ஒரு முறை வழங்கப்பட்டு வருகிறது.

சிறைவாசிகளுக்கு உணவு தயாரிக்க, வாரத்தில் திங்கள் முதல் சனி வரை 6 நாட்கள் சூரியகாந்தி எண்ணெய், ஞாயிற்றுக்கிழமை நல்லெண்ணெய் ஆகியவை உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு சிறைவாசிக்கும், ரூ.50 கூடுதல் செலவில் உணவு தயாரிக்கப்பட்டு, பொங்கல் பண்டிகை, குடியரசு தினம், சுதந்திர தினம் மற்றும் மகாத்மா காந்தி பிறந்த நாள் ஆகிய நாட்களில் சிறப்பு உணவாக வழங்கப்பட்டு வருகிறது.

சமையலறையில் எவர்சில்வர் பாத்திரங்களும், உணவினை எடுத்துச் செல்ல எவர் சில்வர் தள்ளுவண்டிகளும் பயன்படுத்தப்படுவதோடு, சிறைவாசிகளுக்கு உணவு வகைகள் எவர்சில்வர் தட்டுகளிலும், குவளைகளிலும் பரிமாறப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு சிறை நடைமுறை விதிகள், 1983–இல் வரையறுக்கப்பட்டவாறு, சிறைவாசிகளுக்கு ஆடைகளும், படுக்கைகளும் வழங்கப்படுகின்றன. சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள தண்டனை சிறைவாசிகளுக்கு டெரிகாட்டன் முழுக்கால்

சட்டைகளும், அரைக்கை மேல் சட்டைகளும், பெரிய அளவிலான போர்வைகளும் வழங்கப்படுகின்றன. விசாரணை சிறைவாசிகள் தமக்குத் தேவையான சொந்த ஆடைகளை அணிந்துகொள்ள அனுமதிக்கப் படுகின்றனர். போதிய ஆடைகள் இல்லாமலிருக்கும் விசாரணை சிறைவாசிகளுக்கு அரசு செலவில் போதுமான ஆடைகள் வழங்கப்பட்டு வருகிறது.

## v) பெண் சிறைவாசிகளின் நலன்

சிறையினுள் அனுமதிக்கப்படும்போதே பெண் சிறைவாசிகள், பெண் உதவி மருத்துவரால் பரிசோதனை செய்யப்பட்டு, பரிசோதனைக் குறிப்புகள் மருத்துவ அறிக்கையில் பதிவு செய்யப்படுகின்றன.

கருவுற்ற பெண் சிறைவாசிகளின் அன்றாடத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மகளிர் நோய் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் பேறுகாலத்திற்கு முன்னரும் பின்னரும் தேவைக்கேற்ப உரிய சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. பாலூட்டும் பெண் சிறைவாசிகள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு, அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு அரை லிட்டர் பால் வழங்கப்படுகிறது. பிரசவிக்க ஏதுவாக, கருவுற்ற பெண் சிறைவாசிகளுக்கு அவசரகால விடுப்பு வழங்கப்படுகிறது. மேலும், பெண் சிறைவாசிகளுக்கு

விலையில்லா சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு சிறை விதிகள், 1983–இன்படி பெண் சிறைவாசிகளின் குழந்தைகள், கவனிப்போர் எவரும் இல்லாத நிலையில், 6 வயது வரை தாயுடன் சிறையில் இருப்பதற்கும் அனுமதிக்கப்படுகின்றனர்.

வளரும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்து ஆகியவற்றை கருத்தில் கொண்டு, பெண் சிறைவாசிகளுடன் உள்ள ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில், சத்தான குழந்தை உணவுகள் வழங்கப்படுகின்றன.

பெண் சிறைவாசிகளுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளை கவனித்துக் கொள்வதற்காக பெண்கள் தனிச் சிறைகளில் காப்பகம் மற்றும் வளர்ப்பிடம் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

### vi) சிறைவாசிகளின் குறை தீர்க்கும் செயலாக்க முறை

வருடந்திர ஆய்வுகளின் போது, சிறைவாசி–களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு, சிறை

நிர்வாகத்தால் முதன்மையான முன்னுரிமை அளிக்கப்படுகிறது. காவல்துறை இயக்குநர் / சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநரும், சரக சிறைத்துறைத் துணைத் தலைவர்களும், ஒவ்வொரு சிறைவாசியின் குறைகளையும் கேட்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். அனைத்து சிறைவாசிகள் ஆய்வு அணிவகுப்பினை ஒவ்வொரு வாரமும் சிறைக் கண்காணிப்பாளர்கள் நடத்துகின்றனர். அப்போது, சிறைவாசிகளது குறைகளை கேட்டறிந்து அவற்றை தீர்வு செய்கின்றனர்.

சிறைவாசிகள் தங்கள் குறைகளை தெரிவிக்கும் பொருட்டு, அனைத்து மத்திய சிறைகளிலும் மூடி முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் பணி நாளன்று, மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியால் இந்தப் புகார் பெட்டிகள் திறக்கப்பட்டு, புகார்கள் உரிய நடவடிக்கைக்காக தொடர்புடைய அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதைத் தவிர, அமர்வு நீதிபதிகள் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர்களும் மாதம் ஒருமுறை சிறைகளுக்கு திடீர் வருகை புரிந்து, சிறைவாசி–களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் இதர

வசதிகளை ஆய்வு செய்வதுடன், அவர்களின் குறைகளையும் கேட்டறிகின்றனர்.

**vii) சிறப்பு நேர்காணல்**

சிறைவாசிகளை வழக்குரைஞர்கள் நேர்காணல் செய்ய, ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற அனைத்து நாட்களிலும் அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும், சனிக்கிழமையன்று வழக்குரைஞர்களுக்காக பிற்பகல் 1.00 மணிவரை சிறப்பு நேர்காணல் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று, பள்ளி, கல்லூரிக்கு செல்லும் சிறைவாசிகளின் குழந்தைகள் மற்றும் வேலைக்கு செல்லும் சிறைவாசிகளின் கணவன் அல்லது மனைவியின் வசதிக்காக, சிறப்பு நேர்காணல் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**viii) சிறைவாசிகளுடன் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் நேர்காணல்**

சிறைவாசிகள் அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் தொடர்பு கொள்ள ஏதுவாக, தமிழ்நாடு சிறை விதிகள், 1983–இல் குறிப்பிட்டுள்ள நடைமுறையினை பின்பற்றி, நேர்காணல் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளை

நேர்காணல் செய்திட விண்ணப்பிக்க, விலையில்லா விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படுகின்றன, மேலும், இவ்விண்ணப்பப் படிவங்களை இத்துறையின் இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். வெகு தூரத்தில் இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் எவ்வித இடையூறுமின்றி எளிதாக நேர்காணலுக்கு விண்ணப்பிக்க இவ்வசதி உதவுகிறது. சிறைவாசிகளை நேர்காணல் செய்வதற்கு தொலைபேசியின் வாயிலாகவும் முன் அனுமதி பெறலாம்.

### ix) பார்வையாளர் மேலாண்மைத் திட்டம்

அனைத்து மத்திய சிறைகள், மூன்று பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறை & பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள சிறைவாசிகளைக் காண வரும் பார்வையாளர்கள் குறித்த விவரங்களை சேகரிக்கவும், நேர்காணல் முறையை சீரமைக்கவும், எளிய வழிமுறைகளை கொண்ட பார்வையாளர் மேலாண்மைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### x) சிறைத் தொழிற்சாலைகளில் தொழிற் பயிற்சித் திறன் பெறுதல் மற்றும் தொழில் உற்பத்தியில் பங்குபெறுதல்

சிறைவாசிகள் விடுதலை பெற்ற பின்னர், மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாமல்

இருப்பதற்காகவும், நல்ல வேலைவாய்ப்புகளைப் பெற ஏதுவாகவும், அவர்களது வாழ்வாதாரத்திற்கு தேவைப்–படும் திறன் மற்றும் செய்முறை பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. தண்டனை காலத்தில் சிறைவாசிகள் உழைப்பின் அவசியத்தை உணரவும், புதுத்திறன்களைக் கற்பிக்கவும், முத்திரை அரக்கு தொழிற்கூடம், நெசவுத் தொழிற்கூடம், காலணி தொழிற்கூடம், புத்தகம் கட்டுதல், கோர்ப்பான்கள் உற்பத்தி, குளியல் / சலவை சோப்பு தயாரிக்கும் தொழிற்கூடம், தையற்கூடம், தச்சுக் கூடம், காலணி பூச்சு தொழிற்கூடம், அடுமனை தொழிற்கூடம், கைமுறை காகிதக்கூடம், நிலக்கரி சாம்பல் மூலம் செங்கல் தயாரிக்கும் தொழிற் கூடம் மற்றும் பயிற்சிக்கூடம் ஆகியவை சிறைச்சாலைகளில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், தோட்டக்கலை மேம்பாடு, விவசாய உற்பத்தி மற்றும் இயற்கை உர உற்பத்தி போன்ற பயிற்சிகளும் சிறைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

சிறைகளில் தயாரிக்கப்படும் பொருட்களான, சீருடைத் துணி, பெல்ட், தொப்பி, சீருடைக் காலணிகள், காலணி பூச்சு, மழைமேலங்கி (raincoat), கொசுவலை போன்றவை காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் ஆகியத் துறைகளுக்கும், முத்திரை அரக்கு,

கோர்ப்பான், கோப்பு அட்டை, தபால் உறை, கட்டு மற்றும் காரத்துணி, சலவை சோப்பு மற்றும் பிற துணிவகைகள், தீ வாளிகள், இரும்பு கட்டில்கள், சலைன் ஸ்டேண்ட், தடுப்பாண்கள், தள்ளுவண்டிகள் மற்றும் மருந்துப் பெட்டகங்கள் (Bed–side Lockers) போன்றவை பல்வேறு அரசு துறைகளுக்கு வழங்கப்படுகின்றன.

'சேவைத் துறை என்கிற வகையில், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை பல்வேறு அரசுத் துறைகளுக்கு இப்பொருட்கள் வழங்குவதில் சிறப்புரிமை பெற்று வழங்கி வருகிறது.

2021–2022–ஆம் ஆண்டில் சிறைத் தொழிற்கூடங்களில் **உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ.53.32 கோடி** ஆகும்.

### xi) சிறை தொழிற்கூடங்களில் பணிபுரியும் சிறைவாசிகளின் ஊதியம்

சிறை தொழிற்கூடப் பணிகளில் தண்டனை சிறைவாசிகள் ஈடுபடுத்தப்பட்டு, அவர்கள் பெற்ற திறனின் அடிப்படையில் செயல்திறன் பெற்றோர், பகுதி செயல்திறன் பெற்றோர், செயல்திறன் பெறாதோர் என்று வகைப்படுத்தப்பட்டு, ஒரு சிறைவாசிக்கு நாளொன்றுக்கு முறையே

ரூ.200/–, ரூ.180/– மற்றும் ரூ.160/– ஊதியமாக வழங்கப்படுகிறது.

### xii) விடுதலைக்குப் பின்னர் வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பு கோரும் விடுதலைப் பெற்ற சிறைவாசிகளை பணியமர்த்துவதற்காக, சிறைவாசிகள் பெற்றுள்ள திறன், சிறைவாசி விடுதலையாகும் நாள், சிறைவாசியின் இருப்பிடத்திற்கு அருகில் சிறைவாசி பெற்றுள்ள திறன்தொடர்புடைய தொழிற்சாலைகள் போன்ற விவரங்கள் முன்கூட்டியே சேகரிக்கப்படுவதன் மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன.

### xiii) கல்வி மற்றும் தொழிற்கல்வி

**மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரிகள்**

சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. சிறைவாசிகள் 100 சதவீத கல்வி அறிவை அடையும் பொருட்டு, தமிழ்நாடு அரசின் கல்வித் துறையும், ஒன்றிய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகமும், ஒருங்கிணைந்து இதற்கென பல திட்டங்களை தொடங்கி செயல்படுத்தி வருகின்றன. இந்திராகாந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக்கழகமும் சிறைவாசிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு பாடப்பிரிவுகளை நடத்தி வருகிறது.

சிறைவாசிகள் ஏற்கனவே பெற்றுள்ள கல்வி அறிவின் அடிப்படையில் (i) ஆரம்பக் கல்வி, (ii) தொடக்கக் கல்வி, (iii) மேல்நிலைக் கல்வி, (iv) திறந்தவெளி பல்கலைக்கழகங்கள் மூலமாக இளநிலை, முதுநிலை பட்டப்படிப்பு மற்றும் (v) வேலைவாய்ப்பு சார்ந்த பயனுள்ள பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு என வகைப்படுத்தப்பட்டு படிப்பதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறையில் வகுப்புகள் நடத்துவதற்கு, கல்வி தகுதி பெற்ற சிறைவாசிகளும் பயன்படுத்தப்படுகின்றனர்.

அனைத்து சிறைகளிலும் உள்ள கல்வியறிவு பெறாத சிறைவாசிகளுக்கு, மாநில பள்ளிக்கல்வித் துறையின் சிறப்பு கல்வியறிவு பணி / திட்டத்தின் மூலமாக அடிப்படை கல்வி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக, சிறைவாசிகள் அடையாளம் காணப்பட்டு சிறை ஆசிரியர்களுக்கு பள்ளிக் கல்வித் துறையினரால் மத்திய சிறை–I, புழலில் பயிற்சி வழங்கப்பட்டு, இத்திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஆரம்பப் பள்ளிகள், அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை & பார்ஸ்டல் பள்ளி புதுக்கோட்டை, ஆகியவற்றில் செயல்பட்டு வருகின்றன. அரசு செலவில்

சிறைவாசிகளுக்கு அஞ்சல் வழிக் கல்வி வசதி வழங்கப்படுகிறது.

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை & பார்ஸ்டல் பள்ளி புதுக்கோட்டை ஆகியவற்றில் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன. விடுதலைக்குப் பின்னர் சிறைவாசிகள் இலாபகரமான பணிகளில் ஈடுபடும் வண்ணம், அவர்களை தயார்படுத்தும் நோக்கில், பல்வேறு கல்வி மற்றும் தொழிற்கல்வி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

2021–2022–ஆம் ஆண்டில் 53 சிறைவாசிகள் 12–ஆம் வகுப்பு பொதுத் தேர்வும், 99 சிறைவாசிகள் 11–ஆம் வகுப்பு பொதுத் தேர்வும், 201 சிறைவாசிகள் 10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வும், 232 சிறைவாசிகள் 8–ஆம் வகுப்பு தேர்வும் எழுதுகின்றனர்.

2021–2022–ஆம் ஆண்டில் மொத்தம் 9,901 சிறைவாசிகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு பாடப்பிரிவுகளைத் தொடர்ந்து பயின்று வருகின்றனர்:–

| பாடப்பிரிவு | சிறைவாசிகளின் எண்ணிக்கை |
|---|---|
| பள்ளிக் கல்வித் துறையால் நடத்தப்படும் அடிப்படை எழுத்தறிவு கல்வித் திட்டம் | 1,691 |
| அடிப்படைக் கல்வி (7–ஆம் வகுப்பு வரை ஆயத்த படிப்பு) | 3,928 |
| எழுத்தறிவு திட்டக்கல்வி (மாநில ஆதார மையம் வழியாக) | 3,142 |
| கணினி முதுகலை பட்டப்படிப்பு | 3 |
| வணிக மேலாண்மை முதுகலை பட்டப்படிப்பு | 57 |
| கலை / அறிவியல் முதுகலை பட்டப்படிப்பு | 17 |
| கலை / அறிவியல் / வணிகவியல் / இலக்கியம் இளங்கலை பட்டப்படிப்பு | 141 |
| வணிக மேலாண்மை இளங்கலை பட்டப்படிப்பு | 118 |
| 8, 10, 11 மற்றும் 12–ஆம் வகுப்பு 232+201+99+53=585 | 585 |
| பட்டயப்படிப்பு / சான்றிதழ் படிப்பு | 219 |
| மொத்தம் | 9,901 |

திருச்சி மத்திய சிறையில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

2021–2022–ஆம் ஆண்டில் 75 சிறைவாசிகள் பல்வேறு வகையான, கீழ்க்காணும் தொழிற்கல்விகளை பயின்று வருகின்றனர்:–

| வ. எண் | தொழிற் பயிற்சியின் பெயர் | காலம் | சிறைவாசிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மொத்தம் |
| 1 | பொருத்துநர் | 2 வருடம் | 4 | 3 | 7 |
| 2 | மின் கம்பியாளர் | 2 வருடம் | 5 | 9 | 14 |
| 3 | கணினி இயக்குநர் மற்றும் மென்பொருள் உதவியாளர் | 1 வருடம் | 13 | – | 13 |
| 4 | வெட்டுதல் மற்றும் தைத்தல் | 1 வருடம் | 27 | – | 27 |
| 5 | வெல்டர் (வாயு மற்றும் மின்சாரம்) | 1 வருடம் | 14 | – | 14 |
| மொத்தம் | | | 63 | 12 | 75 |

## xiv) விசாரணை சிறைவாசிகள் சீர்திருத்த திட்டம் (PATTAM)

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, சிறைவாசிகளுக்காக பல்வேறு சீர்திருத்தம், மறுவாழ்வு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவ்வாறான ஒரு தொலை நோக்கு திட்டம்தான் 'பட்டம்' (PATTAM). இச்சொல் Personality & Attitude Transformation through Therapeutic Assistance and Management என்ற ஆங்கில சொற்றொடரின் சுருக்கமாகும். இத்திட்டம் காவல், நீதி, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறைகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைந்த முயற்சியாகும்.

சிறைவாசிகளுக்கான ஒரு முழுமையான சீர்திருத்த திட்டத்தை, அதற்கேற்ற சூழலுடன் நடைமுறைப்படுத்தி, மீண்டும் அவர்கள் சமுதாயத்துடன் ஒருங்கிணைந்து பொறுப்பானவராக மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டமானது, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணைகளுக்கிணங்க, சிறு குற்ற செயல்களில் ஈடுபட்டு முதல் முறையாக சிறைபடும் 18–இல் இருந்து 24 வயதிற்குட்பட்ட இளம் குற்றவாளிகளுக்கென, அவர்கள் மீண்டும்

குற்றம் புரிய தலைப்படும் தன்மையைக் குறைக்கும் வகையில் குறிப்பாக வடிவமைக்கப்பட்டதாகும். இத்திட்டம் முதலில் சைதாப்பேட்டை கிளைச்சிறையில் துவங்கப்பட்டு, தற்போது மாநிலத்திலுள்ள அனைத்து மத்திய சிறைகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### xv) சீர்திருத்தப் பணிகள்

**சிறைவாசிகளின் மறுவாழ்வு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு**

சிறைவாசிகள் விடுதலைக்குப் பின்னர், வேலைவாய்ப்புப் பெறவோ அல்லது சொந்தமாக தொழில் அமைத்துக் கொள்ளவோ ஏதுவாக, அவர்களின் சிறைவாசத்தின் போது கல்வி, தொழிற்கல்வி மற்றும் சிறைத் தொழிற்கூடங்களில் செய்முறை அனுபவம் ஆகியவற்றை உள்ளடக்கிய பல்வேறு புதுமை சீர்திருத்த திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

### xvi) இலவச சட்ட உதவி

சிறைவாசிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் இலவச சட்ட உதவி வசதியை மேலும் சிறந்த முறையில் மேம்படுத்தும் வகையில், தமிழகத்தில் உள்ள அனைத்து மத்திய சிறைகள், பெண்கள்

தனிச்சிறைகள், மாவட்ட சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆணைக்குழு மூலமாக தனியாக இலவச சட்ட உதவி மையங்கள் துவங்கப்பட்டுள்ளன. இம்மையத்தின் மூலம், சிறைவாசிகள் வழக்கு தொடர்பான அனைத்து சட்ட உதவிகளையும் இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்.

சிறைவாசிகள் தங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு செய்யவும், பிணை கோரவும், வழக்கு விசாரணையினை நடத்தவும் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களை, இந்த இலவச சட்ட மையங்கள் மூலமாக அணுகலாம். சிறைவாசிகளின் வழக்கு தொடர்பான மேல்முறையீட்டு மனுக்களை உரிய நேரத்தில் தாக்கல் செய்யவும், தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் முன்னேற்ற நிலையினை கண்காணிக்கவும், சிறை அலுவலர்–களுக்கு இந்த இலவச சட்ட உதவி மையங்கள் உதவுகின்றன. இதன் மூலம் சிறைவாசிகள் தங்கள் வழக்குகளில் விரைவாக நீதியினை பெற இயலுகிறது.

### xvii) சிறை நீதிமன்றங்கள்

சிறு வழக்குகளுக்கு விரைவில் தீர்வு காணும் வகையிலும், சிறைகளில் இட நெருக்கடியைக்

குறைக்கவும், அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் சிறை நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நீதித்துறை நடுவர்கள் இந்த சிறை நீதிமன்றங்களுக்கு வருகை புரிந்து, குற்றங்களை ஒப்புக் கொள்ளும் சிறைவாசிகளது வழக்குகளைத் தீர்வு செய்கின்றனர்.

சிறை நீதிமன்றங்களின் மூலமாக **01.01.2016 முதல் 28.02.2022 வரை 4,019** வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

**xviii) சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக சிறைகளில் தொலைபேசி வசதி அறிமுகப்படுத்துதல்**

சிறைவாசிகளின் மனஅழுத்தத்தைக் குறைக்க, அவர்கள் தங்களது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் வழக்குரைஞர்களுடன் கலந்துரையாடுவதற்காக, தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து மத்தியச் சிறைகள், 3 பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறை & பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை, 9 மாவட்ட சிறைகள் மற்றும் 2 திறந்த வெளிச்சிறைகள் ஆகியவற்றில் ரூ.300.29 இலட்சம் செலவில் 65 தொலைபேசிகள் நிறுவப்பட்டுள்ளன.

சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப் பட்டுள்ள தொலைபேசி வசதியை உபயோகிக்கும்

எண்ணிக்கை ஒவ்வொரு சிறைவாசிக்கும் மாதம் ஒன்றுக்கு 4 ஞாயிற்றுக் கிழமைகள் உட்பட 5 முறையிலிருந்து 8 முறையாகவும், பேசும் நேரம் 45 நிமிடங்களிலிருந்து 56 நிமிடங்களாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வசதியானது, 28.02.2022 அன்றைய நிலையில் **15,66,720 முறை** சிறைவாசிகளால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### xix) வானொலிப் பெட்டி வசதி

சிறைவாசிகளின் மன இறுக்கத்தை பெருமளவில் குறைக்க, இசை மற்றும் இதர நிகழ்ச்சிகள், வானொலிப் பெட்டியின் மூலம் ஒலிபரப்பப்படுகின்றன. சிறைவாசிகளது தனிமை மற்றும் அச்ச உணர்வினை குறைப்பதற்காக, அலை பெருக்கியுடன் கூடிய 96 பண்பலை வானொலிப் பெட்டிகள் மற்றும் 384 ஒலிப்பெருக்கிகள் ரூ.14.55 இலட்சம் செலவில் அனைத்து கிளைச் சிறைகளுக்கும் வழங்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன.

### xx) தண்டனைக் குறைப்பு முறையினை ஒழுங்குபடுத்துதல்

குற்ற தண்டனைக் குறைப்பு, சிறைவாசிகள் தங்களது நடத்தையை மாற்றிக் கொள்ள ஏதுவாக,

அவர்களிடத்தில் நேர்மறையான விளைவுகளை ஊக்குவிக்கும் காரணிகளில் ஒன்றாகும். எனவே, இம்முறையினை மேலும் சீரிய முறையில் செயலாக்கம் செய்திட 9 அலுவலகக் கண்காணிப்பாளர் பணியிடங்கள் அனைத்து மத்திய சிறைகளிலும் அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

### xxi) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல்

வேலூர் மற்றும் பாளையங்கோட்டை மத்திய சிறைகளில், ரூ.493.70 இலட்சம் செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்பட்டுள்ளது. மேலும், கோவை, திருச்சி, சேலம் மற்றும் கடலூர் ஆகிய மத்திய சிறைகளில் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் மூலமாக ரூ.380.27 இலட்சம் செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்திட அரசால் ஆணையிடப்பட்டது. திருச்சி, கோவை மற்றும் கடலூர் ஆகிய மத்திய சிறைகளில் இப்பணிகள் முடிக்கப்பட்டும், சேலம், மத்திய சிறையில் பணிகள் நடைபெற்றும் வருகிறது.

### xxii) சவ்வூடு பரவல் மூலம் குடிநீர் சுத்திகரிப்பு சாதனம் நிறுவுதல்

ஒரு மணி நேரத்திற்கு 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்புச் சாதனங்கள் 9 மத்திய

சிறைகளிலும், 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்புச் சாதனங்கள் புழல், வேலூர் மற்றும் திருச்சி ஆகிய 3 பெண்கள் தனிச் சிறைகளிலும் பயன்பாட்டில் உள்ளன. அரசாணை (நிலை) எண்.499, உள் (சிறை.4) துறை, நாள் 17.11.2021–இன் படி ரூ.18.90 இலட்சம் செலவில் 9 மத்திய சிறைகளில் உள்ள பணியாளர் குடியிருப்பில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவிட ஆணையிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## xxiii) முன் விடுதலை

15.09.2021 அன்று Dr. பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணாவின் 113–ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 13.09.2021 அன்று சட்டமன்ற பேரவையில், ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் தண்டனையை, நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் குறைத்து, முன்விடுதலை செய்யப்படுவர் என அறிவித்தன் பேரில், அரசாணை (நிலை) எண்.488, உள் (சிறை.4) துறை, நாள் 15.11.2021–இல் 15.09.2021 அன்று 10/20 ஆண்டுகள் சிறைத்தண்டனை முடித்த ஆயுள் தண்டனை சிறைவாசிகளை, முன்விடுதலை செய்ய அரசு விரிவான வழிமுறைகளை வகுத்து

ஆணையிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அரசுக்கு பரிந்துரைக்கப்படும் ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் கருத்துருக்கள் தனித்தனியாக பரிசீலிக்கப்பட்டு, அவர்கள் முன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## VIII) சிறைத்துறை பணியாளர்கள் நலன்

### i) உணவுக் கட்டணம், இடர்படி, தையற் கட்டணம் மற்றும் சலவைப்படி

மத்திய சிறைகள் மற்றும் மாவட்டச் சிறைகளில் அவசர கால பணிகள், கூட்டான கைது நடவடிக்கைகள், சிறை வளாகங்களில் சோதனை செய்தல் போன்ற நேர்வுகளில் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளும் சிறைக் களப் பணியாளர்களுக்கு உணவுப்படி வழங்கப்படுகிறது. சென்னை நகரில் நாள் ஒன்றிற்கு தலா ரூ.300/– வீதம் ஒரு மாதத்தில் பத்து நாட்களுக்கும், இதர மாவட்டங்களில் நாள் ஒன்றிற்கு தலா ரூ.250/– வீதம் ஒரு மாதத்தில் 6 நாட்களுக்கும், உணவுப்படி வழங்கப்படுகிறது.

காவல் துறையினருக்கு இணையாக, வழங்கப்படும் இடர்படி இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் துணைச் சிறை அலுவலர் வரையிலான நிலையில் உள்ள சிறை பணியாளர்களுக்கு மாதம் ரூ.800/–ம், சிறை அலுவலர்

முதல் சிறை கண்காணிப்பாளர் வரையிலான நிலையில் உள்ள அலுவலர்களுக்கு மாதம் ரூ.900/-ம் வழங்கப்படுகிறது.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் உள்ள இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் சிறை கண்காணிப்பாளர் வரையிலான நிலையில் உள்ள சிறை பணியாளர்களுக்கு இரண்டு சீருடை தைப்பதற்கு தையற் கட்டணமாக ஆண்டுதோறும் தலா ரூ.1000/-ம் சலவைப்படியாக மாதம் தோறும் ரூ.500/-ம் வழங்கப்படுகின்றன.

### ii) இரவு உணவுப்படி

இரவு உணவுப்படியாக நாள் ஒன்றுக்கு தலா ரூ.100/- வீதம், இரண்டாம் நிலை சிறைக் காவலர் தொடங்கி, முதல் தலைமை சிறைக் காவலர் வரையிலான நிலையில் உள்ள சிறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

### iii) காவல்துறை சிறப்பு அங்காடிகளில் மானிய விலையில் பொருட்கள் பெறுதல்

காவல் துறையைச் சார்ந்த சீருடை / அமைச்சுப் பணியாளர்களைப் போன்று, காவல்துறை சிறப்பு அங்காடிகளில் (Police Canteens) மானிய விலையில் வழங்கப்படும் பொருட்களை பெற்றுக் கொள்ளும் சலுகை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

துறையில் பணிபுரியும் / ஓய்வு பெற்ற / காலஞ்சென்ற சீருடை/அமைச்சு மற்றும் இதர பணியாளர்களின் குடும்பங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

**iv) மானிய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள்**

நியாய விலைக் கடைகளின் மூலம் விலையில்லா அரிசியும், விற்பனை விலையில் 50 சதவிகித சலுகை விலையில் கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு ஆகியவை இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரையிலான நிலையில் உள்ள சிறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**v) மிகை நேரப் பணி ஊதியம்**

மிகை நேரப் பணி ஊதியமாக ரூ.200/-, வாராந்திர ஓய்வு நாளன்று பணிபுரியும் முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு வழங்கப்படுகிறது.

**vi) தமிழ்நாடு சிறை சேம நல நிதிக்கு வழங்கப்படும் மானியத் தொகை**

தமிழ்நாடு சிறை நல நிதி உருவாக்கப்பட்டு, அரசிதழ் பதிவுறா பணியாளர்களுக்கும், அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களுக்கும், நிதி உதவி வழங்குவதற்காக

ரூ.10.00 இலட்சம் இணை மானியமாக அரசால் வழங்கப்படுகிறது.

இந்நிதியிலிருந்து இத்திட்டத்தின் உறுப்பினர்–களுக்கு கல்லூரிக் கல்வி, நெடுநாட்பட்ட கடுமையான நோய்கள், விபத்து காயங்கள் போன்றவற்றுக்கான மருத்துவ சிகிச்சை ஆகிய இனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. மேலும், பணியாளர்களோ, அவர்களது தகுதியான குடும்ப உறுப்பினரோ இறந்துவிட்டாலும், இத்திட்டத்திலிருந்து நிதி உதவி வழங்கப்படுகிறது.

### vii) குழுக் காப்பீட்டுத் திட்டம்

குழுக்காப்பீடு திட்டம் சிறைத்துறை துணைத் தலைவர் முதல் இரண்டாம் நிலை சிறைக் காவலர் வரையிலான நிலையில் உள்ள களப்பணியாளர் களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது,

பணியில் இருக்கும்போது அல்லது விபத்தின் காரணமாக இறக்க நேரிடும் பணியாளர்களுக்கு ரூ.2.00 இலட்சம் காப்பீடு தொகையாக வழங்கப் படுகிறது.

### viii) சிறைக் களப்பணியாளர்களுக்கு மழை மேலங்கிகள் (rain coats) மற்றும் கொசு வலைகள் வழங்குதல்

சிறைக் களப்பணியாளர்களின் பயன்பாட்டிற்காக, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், கிளைச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளிகள் (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி) மற்றும் திறந்த வெளிச் சிறைகளில் பணிபுரிபவர்களுக்கு, 3 வருடத்திற்கு ஒரு முறை மழை மேலங்கிகளும், கொசு வலைகளும் வழங்கப்படுகின்றன.

### ix) கருணைத் தொகை வழங்குதல்

பணியில் இருக்கும் போது வீரதீர செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிடும் பணியாளர்களின் சேவையை அங்கீகரிக்கும் வகையில் இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணைத் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகை அவர்களின் வாரிசுதாரர்களுக்கு, பணியாளர்கள் இறுதியாக பெற்ற ஊதியம், அப்பணியாளர் உயிரோடு இருந்தால் அவர் பணி மூப்பில் ஓய்வு பெறும் நாள் எதுவோ, அதுவரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. அதன்பின் தகுதியான குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

மேலும், இறந்த பணியாளர்களின் குடும்பத்தினருக்கு கூடுதலாக கருணைத் தொகை ரூ.2.00 இலட்சம் வழங்கப்படுகிறது. இதைத் தவிர கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கும், கருணைத் தொகை வழங்கப்படுகிறது :–

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தர ஊனம் | ரூ. 50,000 |
| 2. | படுகாயம் | ரூ. 10,000 |
| 3. | சாதாரண காயம் | ரூ. 5,000 |

## x) பணியாளர்களின் குறை தீர்க்கும் செயலாக்க முறை

சிறைப் பணியாளர்களின் குறைகள் முறைப்படி களையப்படுகின்றன. கீழ்க்கண்ட அலுவலர்களால் குறை தீர்ப்பு நாள் கூட்டங்கள் திட்டமிட்ட வகையில் கீழ்க்கண்டவாறு நடத்தப்பட்டு வருகின்றன:–

| | | |
|---|---|---|
| 1. | காவல்துறை இயக்குநர் / சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநர் | காலாண்டிற்கு ஒருமுறை |
| 2. | சரக சிறைத்துறை துணை தலைவர் | மாதம் ஒருமுறை |
| 3. | சிறை கண்காணிப்பாளர் | வாரம் ஒருமுறை |

குறை தீர்ப்பு கூட்டங்களின்போது பணியாளர்–களால் தெரிவிக்கப்படும் குறைகளைக் களைவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதைத் தவிர, காவல்துறை இயக்குநர் /சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநர் சிறைகளில் ஆய்வு மேற்கொள்ளும் போதும், சிறைகளைப் பார்வையிடும் போதும், துறை தலைமையகத்திலும் பணியாளர்களால் அளிக்கப்படும் குறை தீர்ப்பு மனுக்களும், விரைந்து தீர்வு செய்யப்படுகிறது.

**xi) பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல்**

இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் சிறைத்துறை துணைத் தலைவர் வரையிலான சிறைக் களப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அரசால் குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டு வருகிறது.

தற்போது மதுரை மற்றும் பாளையங்கோட்டை மத்திய சிறைகளில் சிறை அலுவலர்களுக்கென தலா 2 குடியிருப்புகள் ரூ.120.00 இலட்சம் செலவில் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் மூலம் கட்டப்பட்டு வருகின்றன.

**xii) பதக்கங்கள்**

பணிக் காலத்தில் வீரதீரத்துடனும், போற்றத்தக்க வகையிலும், சிறந்த பணிச்சான்று கொண்டிருக்கும் சீருடை பணியாளர்களின் திறனை அங்கீகரிக்கும் வகையிலும் அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் கீழ்க்கண்ட பதக்கங்கள் வழங்கப்படுகின்றன:–

**தமிழ்நாடு முதலமைச்சரின் சிறைச் சேவைக்கான பதக்கம்– அண்ணா பதக்கம்**

பதக்கம் வெல்லும் பணியாளர்களுக்கு கீழ் கண்டவாறு பரிசு தொகை அரசால் வழங்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| 1. | சிறை அலுவலர் முதல் சிறை கண்காணிப்பாளர் நிலை வரை | ரூ.15,000 |
| 2. | உதவி சிறை அலுவலர் மற்றும் துணை சிறை அலுவலர் | ரூ.10,000 |
| 3. | இரண்டாம் நிலை சிறைக் காவலர் தொடங்கி முதல் தலைமை சிறைக் காவலர் நிலை வரை | ரூ. 5,000 |

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும், 10 சிறைப் பணியாளர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்படுகிறது.

## தமிழ்நாடு முதலமைச்சரின் சிறை நற்பணிப் பதக்கம்– பொங்கல் பதக்கம்

ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 60 முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு, அவர்கள் ஆற்றிய நற்பணிக்காக இப்பதக்கமும், பதக்கப் படியாக மாதந்தோறும் ரூ.400/–ம் வழங்கப்படுகிறது.

## தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம்

தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம் பெறுவோருக்கு, இத்திட்டத்தின் கீழ் முன்னர் மாதாந்திரப் படியாக வழங்கப்பட்டு வந்த ரூ.300/–க்கு பதிலாக, தற்போது, இப்பதக்கம் பெறுவோருக்கு, எந்தப் பதவியிலிருந்தாலும், ரொக்கப்பரிசு ரூ.5.00 இலட்சம் வழங்கப்படுகிறது.

## குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணிப் பதக்கம்

ஆண்டுதோறும் குடியரசு தினம் மற்றும் சுதந்திர தினத்தன்று துறை பணியாளர்களுக்கு அவர்களின் அப்பழுக்கற்ற பணியினை பாராட்டி, இப்பதக்கம் வழங்கப்படுகிறது. 2022–ம் ஆண்டு குடியரசு தினத்தன்று 3 சிறைத்துறை பணியாளர்கள் இப்பதக்கத்தைப் பெற்றுள்ளனர்.

## IX. புதிய செயல்பாடுகள்

### i) சிறைவாசிகளின் உணவு முறையை மாற்றுவதற்கான குழு

சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவின் அளவு மற்றும் முறையினை மாற்றம் செய்வது குறித்து ஆய்வு செய்வதற்கு, உள் மற்றும் நிதித்துறை ஆகியவற்றை சேர்ந்த துணைச் செயலாளர்கள், சிறை அலுவலர்கள் மற்றும் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் ஊட்டச்சத்து நிபுணர் கொண்ட குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, சிறைவாசிகளின் உணவு முறையினை, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களின் சிறைவாசிகளின் உணவு முறைகளுடன் ஒப்பிட்டு, அதன் பரிந்துரைகளை காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் அவர்களுக்கு அளித்துள்ளது.

### ii) புதிய கணிப்பொறி மற்றும் நகலெடுக்கும் கருவி

அரசாணை (நிலை) எண்.505, உள் (சிறை–4) துறை, நாள் 18.11.2021–இன்படி, ரூ.44.00 இலட்சம் செலவில் சிறைத்துறை தலைமை அலுவலகத்திற்கு 40 கணினி மற்றும் 10 நகலெடுக்கும் இயந்திரங்கள்

கொள்முதல் செய்திட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆணை திருவாளர். எல்காட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**iii) கனரக சலவை இயந்திரங்கள்**

அரசாணை (நிலை) எண்.504, உள் (சிறை–4) துறை, நாள் 18.11.2021–இன்படி அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை & பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்த்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு ரூ. 60.00 இலட்சம் செலவில் கனரக சலவை இயந்திரங்கள் கொள்முதல் செய்திட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**iv) பறக்கும் வசதியுடன் கூடிய வண்ண புகைப்படக் கருவிகள் வழங்குதல் (Drones with Colour Cameras)**

9 மத்திய சிறைகளுக்கு பறக்கும் வசதியுடன் கூடிய வண்ண புகைப்படகருவிகள் ரூ.21.85 இலட்சம் செலவில் கொள்முதல் செய்திட அரசால் ஆணையிடப்பட்டது.

**v) புழல் மத்திய சிறை வளாகத்தில் சென்னை சரக சிறைத்துறைத் துணைத் தலைவருக்கு நிர்வாக அலுவலகம் அமைத்தல்**

புழல் மத்தியசிறை வளாகத்தில், சென்னை சரக சிறைத் துறைத் துணைத் தலைவருக்கான

நிர்வாக அலுவலகத்தினை, ரூ.59.45 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தால் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலைமச்சர் அவர்களால் 30.08.2021 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**vi) பாதுகாப்பு பெட்டக வசதியுடன் கூடிய உணவு அருந்தும் அறை அமைத்தல்**

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை & பார்ஸ்டல் பள்ளி புதுக்கோட்டை ஆகியவற்றில் பணியாளர்களுக்கு பாதுகாப்பு பெட்டக வசதியுடன் கூடிய உணவு அருந்தும் அறை ரூ.251.72 இலட்சம் செலவில் அமைத்திட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இப்பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, மதுரை மத்திய சிறை தவிர அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை & பார்ஸ்டல் பள்ளி புதுக்கோட்டை ஆகியவற்றில் பணிகள் முடிவடைந்துள்ளன. மதுரை மத்திய சிறையில் பணி முடியும் தருவாயில் உள்ளது.

## vii) கூடுதல் கட்டடம் கட்டுதல்

புழல் மத்திய சிறை–II–இல் அடைக்கப்பட்டுள்ள சிறைவாசிகளின் இட நெருக்கடியை கருத்தில் கொண்டு, கூடுதலாக 500 சிறைவாசிகளை அடைத்திடும் வகையில் ரூ.1505.84 இலட்சம் செலவில் கூடுதல் தொகுதிகள் கட்டுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. கட்டுமான பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தால் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 30.08.2021 அன்று திறந்து வைக்கப் பட்டது.

மாவட்ட சிறை, செங்கல்பட்டில் கூடுதலாக 100 சிறைவாசிகளை அடைத்திடும் வகையில் ரூ.106.03 இலட்சம் செலவில் கூடுதல் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது. இப்பணிகள், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

## viii) திண்டிவனம் கிளைச்சிறையை புதிய நீதிமன்ற வளாகம் அமைந்துள்ள இடத்திற்கு மாற்றுதல்.

திண்டிவனம் கிளைச்சிறையை, புதியதாக கட்டப்பட்டுள்ள நீதிமன்ற வளாகத்திற்கு ரூ.839.22 இலட்சம் செலவில் மாற்றிட அரசால்

ஆணையிடப்பட்டு, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

### ix) அடையாள அணிவகுப்பு அறை கட்டுதல்

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை & பார்ஸ்டல் பள்ளி புதுக்கோட்டையில் ஒரு வழி கண்ணாடியுடன் கூடிய சோதனை அடையாள அணிவகுப்பு அறை ரூ.202.97 இலட்சம் செலவில் கட்டமைப்பு செய்திட ஆணையிடப்பட்டு, கட்டுமான பணிகள் முடிவுற்று, செயல்பாட்டில் உள்ளன.

அரசாணை (நிலை) எண்.389, உள் (சிறை–4) துறை, நாள்.17.09.2021–ன்படி ரூ.269.84 இலட்சம் செலவில், 13 மாவட்ட சிறைகளில் சோதனை அடையாள அணிவகுப்பு அறை கட்டிட ஆணையிடப்பட்டு, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

### x) ஆண்டு பராமரிப்பு நிதி

சிறை கட்டடங்கள் மற்றும் பணியாளர்களின் குடியிருப்புகளில் அவ்வப்போது ஏற்படும் பராமரிப்பு பணிகளை, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தால்

மேற்கொள்ள ஆண்டொன்றுக்கு தொடர் செலவினமாக ரூ.500 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சிறை கட்டடங்களின் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான செலவினம், ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள இத்தொகையிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

### xi) சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்தல்

புழல் மத்திய சிறை வளாகத்தில் சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்யும் சாதனம் ரூ.2.41 கோடி செலவில், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டுக் குழுமம் மூலம் நிறுவப்பட்டுள்ளது. இதர மத்திய சிறைகளில் இச்சாதனத்தை பொருத்திட ரூ.2132.83 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

### xii) சிறை அங்காடிகள்

மத்திய சிறைகள், சில மாவட்ட சிறைகள் மற்றும் கிளைச் சிறைகள் ஆகியவற்றில் சிறைவாசிகளது சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்விற்கு வாய்ப்பு அளிக்கும் வகையிலும், அவர்களது மனித சக்தியை ஆக்கப்பூர்வமான வழியில் பயன்படுத்திடவும், **"சிறை அங்காடிகள்"** அரசால் நிறுவப்பட்டுள்ளன. இந்த அங்காடிகளின் வளர்ச்சிக்காக ரூ.10.00 இலட்சம் கொண்ட ஒரு தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அங்காடிகளில், சிறைவாசிகளால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களான அடுமனைப் பொருட்கள், தோல் காலணிகள், பணப்பை (Wallet) தோட்டக்கலை தயாரிப்புகள், சலவை சோப்பு, சானிட்டரி நாப்கின்கள், மெழுகுவர்த்தி, கொசுவலை, மழைமேலங்கி (raincoat), காலணி பூச்சு, ஆயத்த ஆடைகள், தேன், மசாலா தூள், கைவினைப் பொருட்கள், காகித உறைகள், நோட்டுப் புத்தகங்கள், இயற்கை உரமிட்ட காய்கறிகள், செக்கு எண்ணெய் (Cold Pressed Edible Oil), மண்புழு உரம், பஞ்ச கவ்யம் மற்றும் ஓவியங்கள் போன்ற இதர பொருட்கள் **"ஃப்ரீடம் (Freedom)"** என்ற பதிவு செய்யப்பட்ட அடையாள பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இச்சிறை அங்காடிகளில் உணவகம் போன்ற இதர சில்லரை வணிக நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

சிறை அங்காடிகளில் கிடைக்கப் பெறும் இலாபத் தொகை கீழ்க்கண்டவாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது:-

அ) சிறைவாசிகளின் ஊதியத்திற்கு 20%

ஆ) அரசு கணக்கிற்கு 20%

இ) பணியாளர்களின் நல நிதிக் கணக்கிற்கு 20%

ஈ) தமிழ் நாடு சிறைத்துறை பொருட்கள் உற்பத்தி கணக்கிற்கு 40%

2021–2022–ஆம் நிதி ஆண்டில் இந்த அங்காடிகளில் ரூ.316.39 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு, **ரூ. 48.69 இலட்சம் நிகர லாபம்** ஈட்டப்பட்டுள்ளது.

### x) மத்திய சிறை வளாகங்களில் பெட்ரோல் சில்லரை விற்பனை நிலையங்கள் அமைத்தல்

மத்திய சிறை–I, புழல், வேலூர், கோயம்புத்தூர், பாளையங்கோட்டை மற்றும் மாவட்டச் சிறை & பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறை வளாகங்களில் திருவாளர்கள் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து, "முன்னோடி திட்டமாக" (Pilot Project) பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் முதற்கட்டமாக அமைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவும் சிறைவாசிகளின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுக்கு ஏற்ற வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஐந்து பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் 2021–2022–ஆம் ஆண்டு (டிசம்பர் 2021 வரை) ரூ.16378.19 இலட்சம் **விற்பனை செய்யப்பட்டு, ரூ.442.40 இலட்சம் நிகர லாபம்** ஈட்டப்பட்டது.

தற்போது, இரண்டாம் கட்டமாக மத்திய சிறை–I, புழல் – அம்பத்தூர் சாலை, திருச்சி– விமான நிலைய சாலை, கோயம்புத்தூர் – பாரதியார் சாலை, சேலம் & மதுரை மற்றும் பெண்கள் தனிச்சிறை, திருச்சி – காந்தி சந்தை ஆகிய 6 இடங்களில் துவங்கிட அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

## X. முடிவுரை


சிறை உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல், சிறைவாசிகளுக்கு பாதுகாப்பு வழங்குதல், அவர்களின் உடல் நலன் மற்றும் மன நலனை பேணுதல், பெண் சிறைவாசிகள் மற்றும் அவர்களது குழந்தைகள் நலன் மீது அக்கறை கொள்ளுதல், சிறைவாசிகளின் மனித உரிமைகளை உறுதிப்படுத்துதல் ஆகியற்றை செயல்படுத்த சிறைத்துறை அயராது பாடுபடுகிறது. சிறைவாசிகளுக்கான மறுவாழ்வு மற்றும் சீர்திருத்த திட்டங்களை செயல்படுத்துவதற்கும், சிறைப்பணியாளர்கள் நலனுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், சிறை நிர்வாகத்திற்கு, அரசு தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வருகிறது. இம்முன்னெடுப்புகளுடன், தேசிய மற்றும் உலகத் தரத்தில் சிறந்த நிலையை எய்தும் நோக்கில் சிறைத்துறை தொடர்ந்து பயணிக்கும்.

**எஸ். ரகுபதி**

சட்டத்துறை அமைச்சர்

## பிற்சேர்க்கை – I

## சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் நிர்வாக அமைப்பு




குறிப்பு: மத்திய சிறைக் கண்காணிப்பாளர்களின் (புழல் மத்திய சிறை–2 தவிர) அதிகார வரம்பிற்குட்பட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளி மற்றும் கிளைச் சிறைகள் அவர்களது கட்டுப்பாட்டில் செயல்படும்.

# பிற்சேர்க்கை–II

## அனைத்து சிறைகளில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அடைப்பு எண்ணிக்கையின் விவரம்

| வ. எண் | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| **சென்னை மாவட்டம்** | | |
| 1 | மத்திய சிறை–I, புழல் | 1250 |
| 2 | மத்திய சிறை–II, புழல் | 2000 |
| 3 | பெண்கள் தனிச்சிறை, புழல் | 500 |
| 4 | பார்ஸ்டல் பள்ளி, புழல் (Transit Yard) | 100 |
| 5 | கிளைச்சிறை, சைதாப்பேட்டை | 175 |
| **காஞ்சிபுரம் மாவட்டம்** | | |
| 6 | கிளைச்சிறை, காஞ்சிபுரம் | 34 |
| **செங்கல்பட்டு மாவட்டம்** | | |
| 7 | மாவட்டச்சிறை, செங்கல்பட்டு | 200 |
| 8 | கிளைச்சிறை, மதுராந்தகம் | 62 |
| **திருவள்ளூர் மாவட்டம்** | | |
| 9 | கிளைச்சிறை, திருவள்ளூர் | 36 |
| 10 | கிளைச்சிறை, பொன்னேரி | 42 |
| 11 | கிளைச்சிறை, திருத்தணி | 36 |
| 12 | தனிக்கிளைச்சிறை, பூந்தமல்லி | 152 |

| வ. எண் | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| **வேலூர் மாவட்டம்** | | |
| 13 | மத்திய சிறை, வேலூர் | 2130 |
| 14 | பெண்கள் தனிச்சிறை, வேலூர் | 469 |
| 15 | பார்ஸ்டல் பள்ளி, வேலூர் (இணைப்பு) | 54 |
| 16 | கிளைச்சிறை, குடியாத்தம் | 54 |
| **திருப்பத்தூர் மாவட்டம்** | | |
| 17 | கிளைச்சிறை, ஆம்பூர் | 20 |
| 18 | கிளைச்சிறை, திருப்பத்தூர் | 74 |
| 19 | கிளைச்சிறை, வாணியம்பாடி | 30 |
| **இராணிப்பேட்டை மாவட்டம்** | | |
| 20 | கிளைச்சிறை, அரக்கோணம் | 36 |
| 21 | கிளைச்சிறை, வாலாஜா | 19 |
| **திருவண்ணாமலை மாவட்டம்** | | |
| 22 | கிளைச்சிறை, செய்யாறு (வருவாய்த்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது) | 48 |
| 23 | கிளைச்சிறை, திருவண்ணாமலை | 49 |
| 24 | கிளைச்சிறை, ஆரணி (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 17 |
| 25 | கிளைச்சிறை, செங்கம் | 9 |
| 26 | கிளைச்சிறை, போளூர் | 36 |
| 27 | கிளைச்சிறை, வந்தவாசி | 19 |

| வ. எண் | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| **கடலூர் மாவட்டம்** | | |
| 28 | மத்திய சிறை, கடலூர் | 723 |
| 29 | கிளைச்சிறை, கடலூர் (பெண்கள்) | 100 |
| 30 | கிளைச்சிறை, கடலூர் | 143 |
| 31 | கிளைச்சிறை, விருத்தாச்சலம் | 30 |
| 32 | கிளைச்சிறை, பரங்கிப்பேட்டை | 24 |
| 33 | பார்ஸ்டல் பள்ளி, பண்ருட்டி | 15 |
| 34 | கிளைச்சிறை, சிதம்பரம் | 28 |
| **விழுப்புரம் மாவட்டம்** | | |
| 35 | மாவட்டச் சிறை, விழுப்புரம் | 200 |
| 36 | கிளைச்சிறை, விழுப்புரம் | 42 |
| 37 | கிளைச்சிறை, திண்டிவனம் | 29 |
| 38 | பார்ஸ்டல் பள்ளி, செஞ்சி | 80 |
| **கள்ளக்குறிச்சி மாவட்டம்** | | |
| 39 | கிளைச்சிறை, கள்ளக்குறிச்சி | 18 |
| 40 | கிளைச்சிறை, உளுந்தூர்பேட்டை | 24 |
| 41 | கிளைச்சிறை, திருக்கோவிலூர் | 24 |
| | **சேலம் மாவட்டம்** | |
| 42 | மத்திய சிறை, சேலம் | 1431 |
| 43 | மாவட்டச் சிறை, ஆத்தூர் | 200 |
| 44 | திறந்தவெளிச் சிறை, சேலம் | 10 |
| 45 | தனிக் கிளைச்சிறை, சேலம் (பெண்கள்) | 110 |

| வ. எண் | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 46 | பார்ஸ்டல் பள்ளி, சங்ககிரி | 27 |
| 47 | கிளைச்சிறை, ஓமலூர் | 48 |
| | **நாமக்கல் மாவட்டம்** | |
| 48 | கிளைச்சிறை, நாமக்கல் | 34 |
| 49 | பார்ஸ்டல் பள்ளி, பரமத்தி | 16 |
| 50 | கிளைச்சிறை, ராசிபுரம் | 24 |
| 51 | கிளைச்சிறை, திருச்செங்கோடு | 19 |
| | **தருமபுரி மாவட்டம்** | |
| 52 | மாவட்டச் சிறை, தருமபுரி | 200 |
| 53 | கிளைச்சிறை, தருமபுரி | 36 |
| 54 | கிளைச்சிறை, அரூர் | 48 |
| | **கிருஷ்ணகிரி மாவட்டம்** | |
| 55 | கிளைச்சிறை, கிருஷ்ணகிரி (பெண்கள்) | 73 |
| 56 | கிளைச்சிறை, ஊத்தங்கரை | 16 |
| 57 | கிளைச்சிறை, ஓசூர் | 44 |
| | **கோயம்புத்தூர் மாவட்டம்** | |
| 58 | மத்திய சிறை, கோயம்புத்தூர் | 2124 |
| 59 | பெண்கள் தனிச்சிறை, கோயம்புத்தூர் | 187 |
| 60 | திறந்தவெளிச்சிறை, சிங்காநல்லூர் | 100 |
| 61 | கிளைச்சிறை, மேட்டுப்பாளையம் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 36 |
| 62 | பார்ஸ்டல் பள்ளி, பொள்ளாச்சி | 97 |

| வ. எண் | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| **ஈரோடு மாவட்டம்** | | |
| 63 | மாவட்டச் சிறை, கோபிசெட்டிபாளையம் | 200 |
| 64 | கிளைச்சிறை, ஈரோடு | 35 |
| 65 | கிளைச்சிறை, சத்தியமங்கலம் | 16 |
| 66 | கிளைச்சிறை, பவானி | 24 |
| 67 | கிளைச்சிறை, பெருந்துறை | 8 |
| **நீலகிரி மாவட்டம்** | | |
| 68 | கிளைச்சிறை, உதகமண்டலம் | 35 |
| 69 | கிளைச்சிறை, குன்னூர் | 32 |
| 70 | கிளைச்சிறை, கூடலூர் | 28 |
| **திருப்பூர் மாவட்டம்** | | |
| 71 | மாவட்டச் சிறை, திருப்பூர் | 200 |
| 72 | கிளைச்சிறை, அவினாசி | 70 |
| 73 | கிளைச்சிறை, திருப்பூர் | 90 |
| 74 | கிளைச்சிறை, உடுமலைப்பேட்டை | 25 |
| 75 | கிளைச்சிறை, தாராபுரம் | 26 |
| 76 | கிளைச்சிறை, பல்லடம் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 24 |
| **திருச்சி மாவட்டம்** | | |
| 77 | மத்திய சிறை, திருச்சி | 2517 |
| 78 | பெண்கள் தனிச்சிறை, திருச்சி | 600 |
| 79 | கிளைச்சிறை, மணப்பாறை | 14 |
| 80 | கிளைச்சிறை, முசிறி | 17 |

| வ. எண் | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 81 | கிளைச்சிறை, துறையூர் | 17 |
| 82 | கிளைச்சிறை, லால்குடி | 23 |
| **அரியலூர் மாவட்டம்** | | |
| 83 | பார்ஸ்டல் பள்ளி, அரியலூர் | 21 |
| 84 | கிளைச்சிறை, ஜெயங்கொண்டம் | 19 |
| **பெரம்பலூர் மாவட்டம்** | | |
| 85 | கிளைச்சிறை, பெரம்பலூர் | 18 |
| **கரூர் மாவட்டம்** | | |
| 86 | கிளைச்சிறை, கரூர் | 36 |
| 87 | கிளைச்சிறை, குளித்தலை | 26 |
| **புதுக்கோட்டை மாவட்டம்** | | |
| 88 | மாவட்டச் சிறை, புதுக்கோட்டை | 245 |
| 89 | பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை | 200 |
| 90 | கிளைச்சிறை, அறந்தாங்கி | 28 |
| 91 | கிளைச்சிறை, திருமயம் | 14 |
| 92 | கிளைச்சிறை, கீரனூர் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 8 |
| **தஞ்சாவூர் மாவட்டம்** | | |
| 93 | கிளைச்சிறை, திருவிடைமருதூர் | 51 |
| 94 | பார்ஸ்டல் பள்ளி, தஞ்சாவூர் | 87 |
| 95 | கிளைச்சிறை, பாபநாசம் | 46 |
| 96 | கிளைச்சிறை, பட்டுக்கோட்டை | 38 |

| வ. எண் | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 97 | கிளைச்சிறை, கும்பகோணம் | 44 |
| **நாகப்பட்டினம் மாவட்டம்** | | |
| 98 | மாவட்டச் சிறை, நாகப்பட்டினம் | 200 |
| 99 | கிளைச்சிறை, சீர்காழி | 28 |
| 100 | கிளைச்சிறை, மயிலாடுதுறை | 24 |
| 101 | கிளைச்சிறை, தரங்கம்பாடி | 12 |
| **திருவாரூர் மாவட்டம்** | | |
| 102 | கிளைச்சிறை, திருவாரூர் (பெண்கள்) | 20 |
| 103 | கிளைச்சிறை, திருத்துறைப்பூண்டி | 28 |
| 104 | கிளைச்சிறை, நன்னிலம் | 24 |
| 105 | கிளைச்சிறை, மன்னார்குடி | 19 |
| **மதுரை மாவட்டம்** | | |
| 106 | மத்திய சிறை, மதுரை | 1252 |
| 107 | பெண்கள் தனிச்சிறை, மதுரை | 262 |
| 108 | பார்ஸ்டல் பள்ளி, மேலூர் | 48 |
| 109 | கிளைச்சிறை, உசிலம்பட்டி | 18 |
| 110 | கிளைச்சிறை, திருமங்கலம் | 25 |
| **திண்டுக்கல் மாவட்டம்** | | |
| 111 | மாவட்டச் சிறை, திண்டுக்கல் | 200 |
| 112 | கிளைச்சிறை, வேடசந்தூர் | 16 |
| 113 | கிளைச்சிறை, பழனி | 43 |
| 114 | கிளைச்சிறை, கொடைக்கானல் | 9 |
| 115 | கிளைச்சிறை, நிலக்கோட்டை (பெண்கள்) | 36 |

| வ. எண் | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| | **தேனி மாவட்டம்** | |
| 116 | மாவட்டச் சிறை, தேனி | 200 |
| 117 | கிளைச்சிறை, உத்தமபாளையம் | 21 |
| 118 | கிளைச்சிறை, பெரியகுளம் | 39 |
| | **சிவகங்கை மாவட்டம்** | |
| 119 | கிளைச்சிறை, சிவகங்கை | 20 |
| 120 | கிளைச்சிறை, திருப்பத்தூர் | 22 |
| 121 | திறந்த வெளிச்சிறை, புரசடை உடைப்பு | 150 |
| 122 | மாவட்டச் சிறை, இராமநாதபுரம் | 200 |
| 123 | கிளைச்சிறை, பரமக்குடி (பெண்கள்) | 18 |
| 124 | கிளைச்சிறை, முதுகுளத்தூர் | 21 |
| 125 | கிளைச்சிறை, திருவாடனை | 12 |
| | **விருதுநகர் மாவட்டம்** | |
| 126 | மாவட்டச் சிறை, விருதுநகர் | 200 |
| 127 | கிளைச்சிறை, அருப்புக்கோட்டை | 13 |
| 128 | கிளைச்சிறை, ஸ்ரீ வில்லிபுத்தூர் | 24 |
| 129 | கிளைச்சிறை, சாத்தூர் (பெண்கள்) (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 29 |

| வ. எண் | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| **திருநெல்வேலி மாவட்டம்** | | |
| 130 | மத்திய சிறை, பாளையங்கோட்டை | 1332 |
| 131 | தனிக்கிளைச்சிறை, கொக்கிரகுளம் (பெண்கள்) | 84 |
| 132 | கிளைச்சிறை, அம்பாசமுத்திரம் | 16 |
| 133 | பார்ஸ்டல் பள்ளி, நாங்குநேரி | 107 |
| **தென்காசி மாவட்டம்** | | |
| 134 | கிளைச்சிறை, தென்காசி | 44 |
| 135 | கிளைச்சிறை, சங்கரன்கோவில் | 12 |
| **தூத்துக்குடி மாவட்டம்** | | |
| 136 | மாவட்டச் சிறை, பேரூரணி | 200 |
| 137 | கிளைச்சிறை, ஸ்ரீவைகுண்டம் | 72 |
| 138 | கிளைச்சிறை, கோவில்பட்டி | 42 |
| 139 | கிளைச்சிறை, திருச்செந்தூர் | 37 |
| **கன்னியாகுமரி மாவட்டம்** | | |
| 140 | மாவட்டச் சிறை, நாகர்கோவில் | 230 |
| 141 | கிளைச்சிறை, தக்கலை (பெண்கள்) | 24 |
| 142 | கிளைச்சிறை, குழித்துறை | 16 |
| | **மொத்தம்** | **24,342** |



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.11.2021 அன்று கோவை மத்திய சிறை வளாகத்தில் ரூ.127.97 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 உதவி சிறை அலுவலர் குடியிருப்புகளைத் திறந்து வைத்தார்




05.01.2022 அன்று பள்ளி சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம் சார்பில் புழல் மத்திய சிறை - Iஇல் சிறைவாசிகளுக்கு சிறப்பு எழுத்தறிவுத் திட்ட சான்றிதழ் மற்றும் நூலக புத்தகம் மாண்புமிகு சட்டம் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்களால் வழங்கப்பட்டது.




10.05.2021 அன்று சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் கீழ் புழல் மத்திய சிறை வளாகத்தில் இயங்கி வரும் பெட்ரோல் சில்லரை விற்பனை நிலையத்தினை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் பார்வையிட்டார்.



10.05.2021 அன்று சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் கீழ் புழல் மத்திய சிறை-IIஇல் இயங்கி வரும்
குளிர் அழுத்த முறையிலான செக்கு எண்ணெய் உற்பத்திப் பிரிவினை,
மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.



தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச் சங்கத்தின் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் 10.12.2021 அன்று சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் அலுவலகம், எழும்பூர், சென்னை-8இல் நடைபெற்றது.

சிறையிலிருந்து முன்விடுதலையடைந்த தண்டனை சிறைவாசிகளுக்கு ரூ.38 இலட்சம் மதிப்பில், தமிழ்நாடு சிறைமீண்டோர் நலச் சங்கம் சார்பில், மறுவாழ்வு நலத்திட்ட உதவிகளை சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் அவர்கள் வழங்கினார்.



புழல் மத்திய சிறை-I (தண்டனை) வளாகத்தில் இயங்கி வரும் அரசு - தனியார் துறை கூட்டுப் பங்களிப்புத் திட்டத்தின் கீழ், காலணி உற்பத்திப்பிரிவில் தண்டனை சிறைவாசிகள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.



புழல் மத்திய சிறை-IIஇல் கூடுதலாக 500 சிறைவாசிகளை அனுமதித்திடும் வகையில் கூடுதல் தொகுதி ரூ.15,05,84,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.